**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, GANDARVAKOTTAI**

**<u>OS No.1/2021</u>**

2024-ம் ஆண்டு ஜனவரி திங்கள் 2-ம் நாள் 1872-ம் ஆண்டு சட்டத்தின் பிரிவு 58-ன் ஏற்பாட்டின் படி வாதி/பிரதிவாதி என்பவரது சாட்சியத்தின் வாக்குமூலம் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரிக்கப்பட்டார்.

## Cross Examination of PW.2

| | | | |
|---|---|---|---|
| பெயர் | கோவிந்தராஜ் | தந்தை பெயர் | ரெங்கசாமி |
| கிராமம் | பல்லவராயன்பட்டி | தாலுகா | கந்தர்வகோட்டை |
| சமயம் | இந்து | ஜாதி | |
| வயது | 50 | தொழில் | விவசாயம் |

நாள் : 02.01.2024

வா.சா.2

<u>குறுக்கு விசாரணை</u>

1) நான் சாட்சியம் அளிப்பதற்கு நீதிமன்றத்தில் இருந்து எனக்கு அழைப்பாணை வரவில்லை என்றால் சரிதான். வாதி என் உறவினர் என்றால் சரிதான், வாதி, பிரதிவாதி இருவரும் எனக்கு உறவினர் தான். வாதி என்ன பரிகாரம் கோரி பிரதிவாதி மீது வழக்கு கொடுத்துள்ளார் என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

2) என்னுடைய முதல் விசாரணையில், பிரதிவாதியின் சொத்து, அவரின் தகப்பனார் பெயரில் உள்ளது, என்னிடம் கிரையம் கொடுக்க முற்பட்டார் என்று சொல்லியுள்ளேன் என்றால் வேறு ஒருவரிடம் விற்பதற்காக என்னிடம் சொன்னார். முதல் விசாரணையில் நான் என்னிடம் விற்பதாக சொன்னதாக சொல்லிவிட்டு தற்சமயம் வேறு நபரிடம் விற்க சொன்னார் என்று மாற்றி சொல்லுகிறேன் என்றால் சரியல்ல. நான் வாதியின் சகோதரரான பிரதிவாதியிடம், கொடுங்கள் என்று சொன்னேனா என்றால் வேறு நபரிடம் விற்பதாக சொன்னார், அவருடைய அண்ணன் வாதி சுப்பையனை கிரையம் எடுத்துக்கொண்டு, பணம் கொடுக்குமாறும் அல்லது வெளியில் விட்டால் கையெழுத்து போடுமாறும் சொன்னார்.

3) என்னுடைய முதல் விசாரணையில், வாதி பணம் பெற்றுக்கொண்டு கிரையம் வாங்கியதாக சொல்லியுள்ளேன், எந்த தேதி, மாதம் என்று குறிப்பிட்டு நான் சொல்லவில்லை என்றால் சரிதான். யார் முன்னிலையில் கிரையம் கொடுத்தார் என்று சொல்லவில்லை என்றால் சரிதான். அதற்காக எந்த ஆவணமும் ஏற்படுத்திக்கொடுக்கவில்லை என்றாலும் சரிதான். பிரதிவாதி, வாதியிடம் எந்த கிரையமும் கொடுக்கவில்லை, வழக்கிற்காக, உறவினர் என்பதால் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. கிரையம் கொடுப்பதாக பிரதிவாதி, என்னை தொடர்பு கொள்ளவில்லை என்றாலும் வழக்கிற்காக, நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**சாட்சியின் கையொப்பம்**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல, தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு, அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு, என் கையெழுத்து செய்யப்படுகிறது.

ஒப்பம்.ப.ரிஸானா பர்வீன்,
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
கந்தர்வகோட்டை.